# யுத்தத்திற்குப் பின்னரான இலங்கை அரசியலில் மதம்: விஷேட ஆய்வு பொது பல சேனா

எஸ்.எம்.ஆலிப்
சிரேஷ்ட விரிவுரையாளர்,அரசறிவியற்துறை,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
smaaliff@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இலங்கை பன்மைத்துவப் பண்புகளைக் கொண்ட சமூகமுடைய நாடாகும். இங்கு நீண்ட காலமாகவே மக்கள் தமது பன்மைத்துவத்தைப் பேணுவதில் அக்கறை கொண்டவர்களாகவே உள்ளனர். நாட்டின் பெரும்பான்மை மக்கள் பௌத்த மதத்தையும் ஏனையவர்கள் இந்து, இஸ்லாம், மற்றும் கிறிஸ்தவம் ஆகிய மதங்களையும் முறையே பின்பற்றுகின்றனர். இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரை மதம் என்ற காரணி தவிர்க்க முடியாததாக உள்ளதை அவதானிக்கலாம். எனினும் மூன்று தசாப்த கால யுத்தத்திற்குப் பின்னர் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, உட்கட்டமைப்பு, சுய தொழில் ஊக்குவிப்பு, மீள்ஒருங்கிணைவு போன்ற பல சாதகமான அபிவிருத்திகள் ஏற்படுத்தப்பட்ட போதும் மத அடிப்படைவாதக் குழுக்களின் திடீர் எழுச்சியானது மீண்டும் இலங்கையில் சிறுபான்மையினர் மத்தியில் பதட்டத்தை உருவாக்கியுள்ளது. பொதுவாக மதம் சகிப்புத் தன்மையை வலியுறுத்துவதாக இருந்தபோதும் யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் பௌத்த மதவாத அமைப்புக்களின் செயற்பாடுகள் சகிப்புத் தன்மையைப் புறக்கணிப்பதுடன் அரசியலிலும் செல்வாக்குச் செலுத்துகின்றமையே ஆய்வுப் பிரச்சினையாகும். இவ்வாய்வானது யுத்தத்திற்குப் பின்னரான இலங்கை அரசியலில் மதம் என்ற காரணியை விஷேடமாக பொது பல சேனாவுடன் மையப்படுத்தி ஆராய்கின்றது. இதற்காக சுதந்திர இலங்கையின் அரசியலில் மதத்தின் தாக்கம் குறித்த வரலாற்றை சுருக்கமாக மீள் நோக்குவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது. யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையில் பொது பல சேனாவின் தோற்றம், செயற்பாடுகள் குறித்தும் அவை அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் விதம் என்பவற்றைக் கண்டு கொள்வதும் ஆய்வு நோக்கங்களாக உள்ளன. இவ்வாய்வானது பண்பு ரீதியான விபரணப் பகுப்பாய்வாகக் காணப்படுவதுடன் இதற்கான தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. பொது பல சேனா அமைப்பானது யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையின் உருவாக்கமாக இருப்பதுடன் அது பௌத்த கருத்தியலைப் பாதுகாத்துப் பேணல் என்பதை நோக்கமாகக் கொண்டது. எனினும் அதன் செயற்பாடுகள் சிறுபான்மையினருக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராகவும் அச்சுறுத்தலாகவும் காணப்படுவதுடன் இது தொடர்பான அரசாங்கத்தின் பதலீடுகள் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. மதப் பின்புலத்தை கொண்டதாக இவ்வமைப்பு இருப்பினும் அரசியலில் பல்வேறு வழிகளில் தொடர்பு கொண்டிருப்பது பகுப்பாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இது திரும்பவும் முஸ்லிம் சிறுபான்மையினரை முரண்பாட்டுக்குள் இட்டுச் செல்லவும் வழி ஏற்படுத்தலாம் என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது.

பிரதான சொற்கள்:பொது பல செனா,யுத்தத்திற்குப் பின்னரான இலங்கை, மத அடிப்படைவாதம், முஸ்லிம் சிறுபான்மையினர்

## 1. அறிமுகம்

உலகின் நான்கு பெரும் சமயங்களான பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாக இலங்கை உள்ளது. பெரும்பான்மையான பௌத்தர்கள் சிங்களவர்களாகவும் அநேகமான இந்துக்கள் தமிழர்களாகவும் இருக்க முஸ்லிம்கள் பிறிதான இன வகைப்பாட்டைக் கொண்டுள்ளதுடன் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுகின்றனர். கிறிஸ்தவர்கள் பொதுவாக சிங்களவர்கள் மற்றும் தமிழர்களிலே அதிகமாகக் காணப்படுகின்றனர். 2012 சனத்தொகைக் கணக்கீட்டின்படி இலங்கையின் மொத்த சனத்தொகை 20.2 மில்லியனில் 70.2 வீதமானவர்கள் பௌத்தர்களாகவும் 12.6 வீதமானவர்கள் இந்துக்களாகவும் 9.7 வீதமானவர்கள் முஸ்லிம்களாகவும் 7.4 வீதமான கிறிஸ்தவர்களும் காணப்படுகின்றனர் (Department of census, 2012).

1948இல் பிரித்தானியரால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திரமானது அனைத்து தரப்பினரதும் பங்குபற்றலுடன் கூடிய ஜனநாயகத்துக்கு வழிவிட்டதை விட பெரும்பான்மை ஜனநாயகத்துக்கே வழிவிட்டுள்ளது. அதாவது இலங்கை அரசியலில் தொடர்ந்தும் குறிப்பிட்ட தரப்பினரான, எண்ணிக்கையில் அதிகமான பௌத்த சிங்களவர்களுக்கே ஆட்சி அதிகாரம் கிடைக்குமாறு தொடர்ந்து வந்த அரசியலமைப்புகளும் உருவாக்கப்பட்டன.

சுதந்திர இலங்கையின் சோல்பரி யாப்பு மற்றும் பின்நாட்களில் உருவாக்கப்பட்ட குடியரசு யாப்புக்கள் என்பன இலங்கையை ஒரு சமயச் சார்பான நாடாக அறிமுகப்படுத்தாவிடினும் அதன் செயற்பாடுகளில் மதத்தின் செல்வாக்கு காணப்படவே செய்கின்றது. இலங்கை 1948ஆம் ஆண்டில் சோல்பரி யாப்பின்கீழ் சுதந்திரம் பெற்றது. 'சோல்பரி யாப்பு' சிறுபான்மையினருக்கு ஒரு சில குறைந்தபட்ச பாதுகாப்புக்களை வழங்கியது. அதன் 29ஆம் பிரிவு பாகுபாடு காட்டும் சட்டங்களை இயற்றுதலுக்கெதிரான தடைகளைக் கொண்டிருந்தது. எனினும், பிரிவு

29(2) நடைமுறையிலிருந்தும், இலங்கையின் சட்டவாக்கச் சபை பாரபட்சமான சட்டங்கள் பலவற்றை இயற்றியது. இந்திய வம்சாவழித் தமிழரின் குடியுரிமையைப் பறித்த 1948ஆம் ஆண்டின் 'பிரசாவுரிமைச் சட்டம்' மற்றும் சிங்கள மொழியை மட்டும் அரச கரும மொழியாக்கிய 1956ஆம் ஆண்டின் 'அரசகரும மொழிச்சட்டம்' ஆகியன இத்தகைய சட்டங்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும். இச்சட்டங்களின் பின்னால் பௌத்த மதம் என்ற காரணி காணப்பட்டது.

குடியரசு யாப்புக்களைப் பொறுத்தவரை அதன் உள்ளடக்கங்கள் இலங்கையை ஒரு சமயச் சார்பான நாடாகவே வெளிப்படுத்தியது. 1972ஆம் ஆண்டைய முதலாம் குடியரசு யாப்பானது அரசின் ஒற்றையாட்சித் தன்மையை நிலைநிறுத்தியதுடன் குடியரசில் பௌத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை வழங்கியது. சிங்கள மொழிக்கு அரசியலமைப்பு ரீதியான முதன்மை அந்தஸ்தை வழங்கியது. தமிழ் மக்களின் சம்மதமும் பங்கேற்பும் இன்றியே இது சட்டமாக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பு 1972ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் அடிச்சுவட்டைப் பின்பற்றிபௌத்த மதத்திற்கு மிக முக்கிய இடத்தை வழங்கி,தொடர்ந்து சிங்கள மொழிக்கு முதன்மை நிலையை வழங்கியது. தற்போதய அரசியலமைப்பான இரண்டாம் குடியரசு யாப்பின் அத்தியாயம் IIஇன் உறுப்புரை 9, இலங்கை குடியரசு பௌத்த மதத்துக்கு முதன்மை ஸ்தானத்தை வழங்குதல் வேண்டுமென்றும் உறுப்புரை 10 மற்றும் 14(1) (உ) என்பவற்றின் கீழ் ஏனைய அனைத்து மதங்களுக்கும் உரிமைகளை வழங்கும் அதேவேளை பௌத்த சாசனத்தைப் பாதுகாத்துப் பேணுவது அரசின் கடமையாக இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றது.

இவ் ஏற்பாடுகள் சுதந்திர இலங்கையின் அரசியலில் பௌத்த மேலாதிக்க சிந்தனையை தெளிவுபடுத்துகின்றது. ஜயதேவ உயங்கொட கூறும்போது சிங்கள பௌத்தமானது வன்முறையற்ற சமூகக் கருத்தியலுக்கான குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யவில்லை. மாறாக வரலாற்றில் மரிபுரீதியாகவே பௌத்த இன அரசியல் வன்முறைக்கே அது இயல்பாக ஆதரவளித்துள்ளது(Uyangoda, 1996).

இவ்வாறு அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டாலும் ஏனைய மதங்களுக்கான உரிமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் அத்தியாயம் IIIஇன் உறுப்புரை 10 தனது மதம் அல்லது வழிபாடு, அனுட்டானம் அல்லது கடைப்பிடித்தல் மற்றும் போதனை என்பவற்றின் மீதான நம்பிக்கையை தானாக அல்லது மற்றவர்களுடன் இணைந்தோ மற்றும் பகிரங்கமாக அல்லது தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவதற்கான இந்த சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு ஒவ்வொரு பிரஜையும் உரித்துடையவராவார் என அரசியலமைப்பு தெரிவிக்கின்றது.

உலகில் இனத்துவ மோதலுக்கும் அதன் விளைவான இன யுத்தத்திற்கும் மிக சிறப்பான எடுத்துக்காட்டாக இலங்கை காணப்படுகின்றது. இதற்கான அடிப்படைக் காரணங்கள் காலனித்துவ காலத்தில் அடித்தளமிடப்பட்டிருந்த போதும் சுதந்திரத்திற்குப் பின்னரே வலுவடைந்தன. எவ்வாறாயினும் இம்மோதலுக்கான காரணிகளாக பல விடயங்கள் பலத்த பங்களிப்பைச் செய்த போதும் மதம் நேரடியான காரணமாக சுதந்திரம் வரைக்கும் பெரும்பாலும் இருந்ததில்லை.

## 2. ஆய்வுப் பிரச்சினை

எனினும் முன்னைய காலங்களை விட யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் அரசியலில் மதத்தின் செல்வாக்கு அதிகரித்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது. பௌத்த அடிப்படைவாதக் குழுக்களான பொதுபல சேனா, சிகல ராவய போன்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் இவ்வாறான தோற்றத்தை உருவாக்கியுள்ளன. யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் குறிப்பாக மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, உட்கட்டமைப்பு, மீள்ஒருங்கிணைவு போன்ற இன்னும் பல சாதகமான விடயங்கள் ஏற்படுத்தப்பட்ட போதும் நிலையான அபிவிருத்தி மற்றும் சமாதானத்தை எட்டுவதில் பல தடைகளை எதிர்நோக்கிய வண்ணமே உள்ளது. அந்தவகையில் அதிகரித்து வரும் மத தலங்கள் மீதான தாக்குதல்கள், முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிரான பிரச்சாரம், அச்சுறுத்தல், முஸ்லிம் பிரதிநிதிகளும் அமைப்புக்களும் விமர்சிக்கப்படல்போன்றவை மீண்டும் இலங்கையில் ஒரு பதட்டத்தை சிறுபான்மையினர் மத்தியில்உருவாக்கியுள்ளது.

## 3. ஆய்வு நோக்கமும் ஆய்வு முறையியலும்

இவ்வாய்வானது யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையில் பொது பல சேனாவின் தோற்றம், செயற்பாடுகள் குறித்தும் அவை அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் விதம் என்பவற்றைக் கண்டு கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது பண்பு ரீதியான விபரணப் பகுப்பாய்வாகக் காணப்படுவதுடன் இதற்கான தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், இணையம், அறிக்கைகள் மற்றும் பத்திரிகைகள் என்பவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. முடிவும் கலந்துரையாடலும்

### 4.1 பொதுபல சேனா அமைப்பின் தோற்றம் மற்றும் அதன் செயற்பாடுகள்

பௌத்தம் உலகின் மிக அதிகமாக சமாதானத்தைப் போதிக்கும் மார்க்கங்களுள் ஒன்றாக கருதப்படுகின்றது. இருந்தபோதும் வரலாற்றில் அது வன்முறைப் பக்கங்களைக் கொண்டதாகவே காணப்பட்டு வந்துள்ளது(Votta, 2007).அரசியலில் அதிகரித்து வரும் மதத்தின் செல்வாக்கை இன்னும் ஊக்கப்படுத்துவதாக சில அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றமையும் அது குறிப்பாக பௌத்த மதத்தின் நிலையை உறுதிப்படுத்துவதாக செயற்பட்டதுடன் ஏனைய மதங்களுக்கு அச்சுறுத்தலாக காணப்படுவதும் அண்மைக்கால இலங்கை அரசியலின் அனுபவங்களாகும்.

குறிப்பாக ஜாதிக ஹெல உறுமய(JHU)என்ற கட்சியானது சிங்கள பௌத்தர்களின் நலன்களை மேம்படுத்தவும் அரசியல் விடயங்களில் பௌத்த வழிகாட்டல் தத்துவங்களை எற்படுத்தவும் அதேபோல தமிழ் வன்முறைகளை படை கொண்டு துடைத்தெறியவும் உருவாக்கப்பட்டது(Imthiyas, 2010).அது தனது நோக்கத்தை அடையுமுகமாக காலாகாலம் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களைவெளியிட்டுக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் இக்கட்சியானது அதனது கொள்கை தொடர்பில் தீவிரமாக செயற்படவில்லை என்ற அதிருப்தி கட்சிக்குள்ளேயே காணப்பட்டமையும் தீவிரமாக செயற்படக்கூடிய தரப்பினர் உருவாகக் காரணமாகியது.அந்தவகையில் ஜாதிக ஹெல உருமய என்ற பௌத்தமதத்தைப் பின்புலமாகக் கொண்டு இயங்கும் அரசியல் கட்சியிலிருந்து கலகொட அத்த ஞானசார தேரர் மற்றும் கிரம விமல ஜோதி தேரர் ஆகிய இரண்டு பிக்குகள் தம் விருப்பிற்கு ஏற்ப ஜாதிக ஹெல உருமய செயற்படவில்லை எனச் சுட்டிக்காட்டி அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்று பொது பல சேனா(BBS) என்ற அமைப்பை 2012 ஜூன் காலப்பகுதியில் உருவாக்கினர். பௌத்த தத்துவங்களைப் பாதுகாத்தல் என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு பின்னர் இலங்கையை சிங்கள, பௌத்த தேசமாக மாற்றுவதை தம் பிரதான நோக்கமாக அறிவித்துக் கொண்டது. இவ்வமைப்பின் ஸ்தாபகராக கிரம விமல ஜோதி தேரரும் அதன் செயலாளராக கலகொட அத்த ஞான சார தேரரும் காணப்படுகின்றனர் (Farzana et al, 2014).

இவ்வமைப்பின் செயற்பாடுகளைப் பொறுத்தவரை இலங்கையைத் தனியே பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட நாடாக மாற்ற வேண்டும் என்ற தீவிர சிந்தனையை குறுகிய காலப்பகுதியில் பெரும்பான்மை சிங்கள சமூகத்திடையே ஏற்படுத்தியதுடன் சிங்கள தேசியவாதத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதாய் அமைந்திருந்தன. இந்நோக்கத்தை நிறைவு செய்யுமுகமாக புத்தரின் அமைதிவழி நடக்க வேண்டிய பௌத்த தேரர்களை தீவிர வழிமுறைகளின் பால் திருப்பியதுடன் இதற்காக பெருமளவான சிங்கள மக்களை தன்னுடன் இணைத்துக் கொண்டு ஏனைய சிறுபான்மையினருக்கு எதிராகசெயற்படத் தொடங்கியது. இது தனது நோக்கத்தை அடைவதற்காக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடல், கோசங்களை எழுப்பல், திடீர் தாக்குதல்களை மேற்கொள்ளல், பௌதீக அம்சங்களுக்கு சேதம் விளைவித்தல், எச்சரிக்கை விடுத்தல், அச்சுறுத்தல் விடுத்தல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி வருகின்றது.

பொது பல சேனா தனது முதல் தேசிய மாநாட்டை 2012 ஜூலை 28இல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்தியது. இதில் 1200 பிக்கு மற்றும் பிக்குணிகள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் அரச ஆரோக்கிய மையங்களில் செய்யப்படும் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சையை நீக்குதல், நாட்டில் நிலுவையிலுள்ள பல்வேறு சட்டங்களை நீக்கி ஒரே சட்டம் கொண்டு வரப்படல், கல்வி முறையில் பௌத்த கல்விக்கு முன்னுரிமை வழங்கல், 1959 நவம்பரில் புத்த சாசன ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்த அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தல், மற்றும் பௌத்தம் சம்பந்தமான நூல்கள், அவற்றின் உள்ளடக்கங்களைப் பரிசீலிப்பதும் அக்கருத்தியலைப் பாதுகாப்பதும் ஆகிய 5 தீர்மானங்களை நிறைவேற்றியது (Farzana et al, 2014).

இவ்வாறு ஆரம்பத்திலேயே சில முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றி தனது செயற்பாடுகளைத் தொடங்கிய இவ்வமைப்பு பிற்காலத்தில் தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கத் தொடங்கியது. பங்களாதேசில் பௌத்தர்களுக்கு எதிரான கலவரத்தைக் கண்டித்து கொழும்பிலுள்ள உயர் ஸ்தானிகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதுடன் கல்வீச்சும் மேற்கொண்டது (CPA, 2013). அதேபோல சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வின் முடிவுகள் முஸ்லிம் மாணவர்களுக்கு சாதகமாக அமைந்துள்ளன எனக் கூறி கொழும்பு சட்டக் கல்லூரி முன் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டது மேலும் பொது பல சேனா தமது கூட்டங்களில் இலங்கையை பௌத்த நாடாகவும் அதன் அரசானது சிங்கள பௌத்த மக்களால் அமைக்கப்பட்டதாகவும் அடிக்கடி பறைசாற்றிக் கொண்டதுடன் தமது அமைப்பு முஸ்லிம் பயங்கரவாதத்துக்கு எதிராக அறிவிக்கப்படாத முறைசாராத காவற்படையாக செயற்படும் எனவும் அடிக்கடி சுட்டிக்காட்டியது (Farzana et al, 2014).

ஆரம்பத்தில் சிங்கள தேசியவாதத்துக்கு எதிராக அதற்கு சவால் விடக் கூடியளவு தமிழ் தேசியம் காணப்பட்டது. ஆனால் 2009 மே மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதனைத் தொடர்ந்து இச்சிங்கள தேசியவாதம் முஸ்லிம் சிறுபான்மையினரின் பக்கம் திரும்பியது. தொடர்ச்சியாக முஸ்லிம் சமூகம் மீது நாட்டின் பல பாகங்களிலும் தமது காழ்ப்புணர்ச்சியை பல்வேறு வழிமுறைகளில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

அதன் விளைவாக முஸ்லிம்களின் மத விழுமியங்கள் விமர்சிக்கப்பட்டதுடன் வழிபாட்டுத் தலங்களும் வர்த்தக மையங்களும் தாக்குதலுக்குள்ளாகின. முஸ்லிம்களின் மத விழுமியங்களுள் ஒன்றான ஹலால் உணவு என்ற அம்சத்தை பொது பல சேனா மிகக் கடுமையாக விமர்சித்தது. இது தவிர முஸ்லிம்களின் கலாசார ஆடையான அபாயா மற்றும் பர்தாவுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லிம் பெண்கள் தமது மத விழுமியப்படி ஆடையணிவது ஆயுதம், போதைப் பொருள் கடத்தல் மற்றும் ஆள்மாறாட்டம் போன்ற குற்றச் செயல்களுக்கு வழிவகுப்பதாக தனது பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றது.

உயிர்க் கொலையைக் காரணம் காட்டி மாடு அறுப்பதைத் தடை செய்வதற்கான பிரச்சாரத்தை நாடு பூராகவும் முடுக்கி விட்டதுடன் சில மாட்டிறைச்சிக் கடை மீதும் தாக்குதல்களை நடத்தி தமது எதிர்ப்பை வெளிக்காட்டியது. மேலும் முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலங்களை இலக்கு வைத்து தனது தாக்குதல்களை மேற்கொண்டு வந்தது. அந்த வகையில் அநுராதபுரம், தம்புள்ளை, தெஹிவளை, இராஜகிரிய, காலி போன்ற இடங்களில் தாக்குதல்களை நடத்தியதுடன் மதரசாக்களை பயங்கரவாதம் போதிக்கப்படும் இடம் எனவும் குற்றம் சாட்டி இதனைத் தடை செய்து அதனோடு தொடர்புடையவர்களைக் கைது செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தது.

இது ஒரு பௌத்த தேசம் என்றும் எதற்காக பல் கலாசார நாடு என அழைக்க அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்றும் வினா எழுப்புகின்றது. அத்துடன் இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்காத எந்த ஒரு அரசியல்வாதிக்கும் வாக்களிக்க வேண்டாம் என்றும் மக்களை அறிவுறுத்தியது(www.eyesrilanka.com, 2012).

மேலும் அண்மையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்ற அலுத்கம பிரதேசத்தில் பௌத்த தேரர்களின் தலைமையில் முஸ்லிம்களுக்கு எதிராக பாரிய கலவரம் ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் உயிரிழப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன. அத்துடன் பலர் காயங்களுக்குட்பட்டதுடன் முஸ்லிம்களின் வீடுகள், வர்த்தகக் கட்டடத் தொகுதிகள், பள்ளிவாசல் என்பனவும் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன(www.dbjayaraj.com, 2014).

அதேபோல பொது பல சேனாவின் செயற்பாடுகளை நோக்கும்போது இவை மியன்மாரில் பிக்கு அஷின் விராது தலைமையில் இயங்கும் 969 என்ற அமைப்பின் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகளை ஒத்ததாகக் காணப்படுகின்றன. இவ்வமைப்பானது மியன்மாரில் ரொஹியங்கோ பகுதியில் முஸ்லிம்களுக்கெதிரான பாரிய வன்முறைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக மியன்மாரில் பெரும்பான்மையினராக பௌத்தர்கள் காணப்பட்ட போதும் முஸ்லிம்களின் விகிதாசாரம் அதிகரிப்பது தொடர்பிலும் இஸ்லாமிய சிந்தனையின் பாலான அச்சமுமே இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதற்குக் காரணமாயின. இது மியன்மார் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடும் வன்முறைத் தோற்றப்பாட்டையே இலங்கையின் பொது பல சேனாவின் செயற்பாடுகளிலும் காண முடிவதாக விமர்சிக்கப்படுகின்றது.

பல்வேறுபட்ட சிங்கள பௌத்த அமைப்புக்கள் வலியுறுத்துவது இலங்கையர்களுக்கு ஒரே பொதுவான இன அடையாளம், அதாவது சிங்கள பௌத்த அடையாளமே அதுவாகும். இவ்வாறு முஸ்லிம் சிறுபான்மையினர் இலக்கு வைக்கப்படுவதற்குப் பின்னால் பொது பல சேனா அல்லது பௌத்த அதிகாரப் படையே காணப்படுகின்றதுடன் முஸ்லிம் சிவில் சமூகத்தினால் இலங்கை அரசாங்கத்திடம் முறையீடு செய்யப்பட்ட போதும் அது தொடர்பாக மிகக் குறைந்தளவான பதிலிறுப்பே காணப்பட்டது (Aliff, 2015).

பொது பல சேனாவின் இவ்வாறான செயற்பாடுகள் இலங்கை சமூகத்தினரிடையே குறிப்பாக முஸ்லிம்களிடையே பலத்த பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. மக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் என்பன பாதிக்கப்பட்டதுடன் அவர்களின் உயிர்,உடைமை, கலாசாரம் போன்றவற்றுக்கான அச்சுறுத்தலும் அதிகரித்துள்ளன. இது முஸ்லிம்கள், பெரும்பான்மையினரை சந்தேகக் கண் கொண்டு பார்க்கவும் காரணமாகியது.

4.2 பொது பல சேனாவின் செயற்பாடுகள் அரசியலோடு தொடர்புபடுகின்ற விதம்

ஆரம்பத்தில் அரசியல் சாராத அழுக்கக் குழுவாக மட்டுமே செயற்பட்ட பொது பல சேனாவின் செயற்பாடுகள் பல்வேறு வழிகளில் அரசியலுடன் தொடர்புபடுகின்றன. இவ்வமைப்பின் ஹலால் சான்றிதழுக்கு எதிரான போராட்டம் காரணமாக உலமா சபை ஹலால் சான்றிதழ் வழங்குவதை நிறுத்திக் கொண்டதுடன் அப்பொறுப்பை அரசாங்கத்திடம் ஒப்படைக்க முயன்ற போது இலங்கை அரசாங்கம் அதனை ஏற்க மறுத்தது. மேலும் அகில இலங்கை ஜம்இயதுல் உலமா சபை ஹலால் முத்திரையை நிறுத்த இணங்கியமையானது ஹலால் உணவை தெரிவு செய்யக்கூடிய எந்த முஸ்லிமும் இலங்கையில் இல்லை என்பதையே உணர்த்துகின்றது(Aliff, 2015). ஹலால் சான்றிதழ் வழங்கும் செயற்பாட்டை முற்றாக நிறுத்துவது தொடர்பான பிரச்சினைக்கு பாதுகாப்பு செயலாளர் கோதாபய ராஜபக்ஷ தலைமையில் ஜம்இயதுல் உலமா சபையினரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதன்போது ஹலால் முறையை நிறுத்துவதாக அவர்கள் உறுதியளித்தபோதும் அதனை அவர்கள் நிறைவேற்றவில்லை எனக் கூறி இலங்கைக்குள் ஷரீஆ சட்டத்தை அமுல்படுத்த ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் எனவும் உறுதியாக கருத்துத் தெரிவித்தது (வீரகேசரி, 2013.10.20).

2013 பெப்ரவிரி 6இல் பாராளுமன்ற அமர்வின்போது முஸ்லிம்கள்எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் பௌத்த சாசன மற்றும் மத விவகார பிரதியமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன கூறுகையில் இந்த நாட்டில் இனரீதியான, மத ரீதியான எந்த சம்பவங்களும் இடம்பெறவில்லை என்று கூறினார். ஆனால் அதேநேரம் பிக்குகள் மற்றும் நபர்கள் அடங்கிய குழு குளியாப்பிட்டியில் பன்றியொன்றின் படத்தின் குறுக்கே அல்லாஹ் என்று எழுதி ஏந்திச் சென்றது. இப்படியொரு ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யபட்டிருப்பதாக பொலிசாருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் பொலிசார் அதனைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை (வீரகேசரி, 2013.02.07). இதன் மூலம் பொது பல சேனாவுக்கு அரசாங்கத்தின் மறைமுகமான ஆதரவு காணப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

அதேபோல மாடு அறுப்பதற்கு எதிரான பிரச்சாரத்தை பொது பல சேனா மிகக் கடுமையாக மேற்கொண்டதுடன் சிறுபான்மையினரின் மாட்டு இறைச்சிக் கடைகள் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டது. அதனைத் தொடர்ந்து கண்டி தலதா மாளிகை முன்பு ஒரு பௌத்த தேரர் மாடு அறுப்பதைத் தடை செய்யுமாறு கோரி தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டமை அவர்களின் எதிர்ப்பைக் காட்டிய உக்கிர வழிமுறைகளில் ஒன்றாகும் (நவமணி,2013.6.2). இதனைத் தொடர்ந்து அரசாங்கம் மாடுகளுக்கு ஒரு வித நோய் இருப்பதாகக் கூறி குறிப்பிட்ட மாடு அறுப்பதற்கான தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது. இது நாட்டின் சகல பாகங்களிலும் அமுல்படுத்தப்படாமல் சிறுபான்மையினர் செறிந்து வாழ்கின்ற பகுதிகளிலே அமுல்படுத்தப்பட்டது. இதனை மீறி மாடு அறுத்தவர்கள் கைது செய்யப்பட்டனர்.

உலகத்தில் விலங்குகள் அறுப்பது என்பது உயிர்வதை என்ற காரணத்துக்காக எதிர்க்கப்பட்ட போதும் இலங்கையில் அது அரசியலுக்காகவே எதிர்க்கப்பட்டது (Aliff, 2015). அத்துடன் அரசாங்கத்தின் முக்கிய பதவியில் இருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவின் ஆதரவும் இவ்வமைப்புக்குப் பக்கபலமாக இருக்கின்றது. 2013 மார்ச் 9இல் கோதாபய ராஜபக்ஷ தலைமையில் பொது பல சேனாவின் கலாசாரம் மற்றும் பயிற்சி மையமான "மெத் செவனா" உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது (groundviews.org, 2013). முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோதாபய ராஜபக்ஷ 2013இல் கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெற்ற பாதுகாப்பு மாநாட்டில் சில வெளிநாட்டுக் குழுக்கள் இலங்கை முஸ்லிம்களை உலக முஸ்லிம் சமூகத்துடன் இணைப்பதற்கு ஊக்கப்படுத்துகின்றன. இதனால் மக்களுடைய ஒருங்கிணைவு என்பது குறைவாக உள்ளது. எனினும் இது உலகம் எங்கும் பிராந்தியத்திலும் முஸ்லிம் அடிப்படைவாதத்தின் பரவலால் ஆகும் என்கிறார் (Farook, 2014).இதன்மூலம் பாதுகாப்பு செயலாளர் தனியே சிறுபான்மையினரை குற்றம் சாட்டுவதுடன் பொது பல சேனா போன்ற அடிப்படைவாதக் குழுக்கள் தொடர்பாக எதையும் குறிப்பிடவில்லை.

அவ்வாறே நாட்டிலுள்ள சகல அரபு மத்ரசாக்களையும் மூட வேண்டும் என அரசாங்கத்திடம் பொது பல சேனா கோரிக்கை விடுத்துள்ளது. இந்த நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முஸ்லிம் சிறுவர்கள் மத்தியில் தூண்டி இளவயதிலேயே தலிபான், அல்-காய்தா போன்ற இயக்கங்கள் பற்றிய கொள்கைகளையும் இனவாதத்தையும் புகுத்துவதே இவற்றின் செயற்பாடாகும். பாகிஸ்தான் தனி முஸ்லிம் நாடாக இருந்த போதும் முன்னாள் தலைவர் பர்வேஷ் முஷர்ரப் அங்கிருந்த 20,000 மத்ரசாக்களை மூடினார். நமது நாடு பௌத்தநாடாக இருந்தும் முஸ்லிம் குர்ஆன் மத்ரசாக்களை மூட நடவடிக்கை எடுக்காதது ஏன்? என வினா எழுப்பியது (சுடர் ஒளி, 2013.06.11).

அவ்வாறே தம்புள்ளை பள்ளிவாசல் பௌத்தர்களின் புனித பிரதேசத்திற்கு உட்பட்டது எனக் கூறி அதனைத் தாக்கியதுடன் அப்பள்ளிவாசலை அகற்றுமாறும் தொடர்ந்தும் போராட்டம் நடத்தி வந்தது. இதன் காரணமாக 1960 முதல் செயற்பட்டு வந்த இப்பள்ளிவாசலைச் சுற்றியுள்ள 22 கட்டட நிர்மாணங்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என 7 நாட்கள் கெடு விதித்து நகர அபிவிருத்தி அதிகார சபை அறிக்கை அனுப்பியது. இதுவும் அரசியலில் பொது பல சேனாவின் செல்வாக்கை வெளிப்படுத்துகின்றது. தம்புள்ளை பள்ளிவாசலை உடனடியாக இடமாற்ற வேண்டும் என்ற பிரதமரின் உத்தரவும் முஸ்லிம் மக்களின் பங்குபற்றல் இல்லாமலேயே மேற்கொள்ளப்பட்டது. அதேபோல ஜெயிலானி பள்ளிவாசல் பகுதியில் அமைந்துள்ள சட்ட விரோத கட்டங்களை அகற்ற சுமார் 150 பேரைக் கொண்ட சிஹல ராவய மற்றும் பொது பல சேனா பிக்குகள் குழுவுடன் முற்றுகையிட முயற்சித்ததைத் தொடர்ந்து முஸ்லிம் பிரதிநிதிகள் அரசின் உயர் மட்டப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாட்டு நிலைக்கு வந்தனர். (Farook, 2014).

மேலும் மாகாண சபை முறைக்கான 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்றும் இத்திருத்தத்திலுள்ள சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் நீக்க வேண்டும் என்றும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பெரும்பான்மையினரைப் பதிவு செய்து குடியமர்த்த வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தது. அத்துடன் வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக இருந்தால் காணி, பொலிஸ் அதிகாரங்களில் திருத்தங்களை மேற்கொண்ட பின்னரே நடத்துமாறு வலியுறுத்தியது (வீரகேசரி, 2013.10.20). ஒரு மத ரீதியான அமைப்பான பொது பல சேனா அரசியலமைப்பைத் திருத்தக் கோரி வற்புறுத்தும் அளவுக்கு பலம் பெற்று வளர்ந்து வருவது இலங்கை அரசியலில் அதன் செல்வாக்கையும் வளர்ச்சியையும் புலப்படுத்துகின்றது.

மேலும் இலங்கையில் பல்வேறு வகையான சட்டங்கள் குறிப்பாக முஸ்லிம் தனியார் சட்டம், தேசவழமைச் சட்டம், கண்டியன் சட்டம் போன்றவை நடைமுறையில் காணப்படும் போது அவை எல்லாவற்றையும் நீக்கி ஒரே மாதிரியான சட்ட முறைமையைக் கொண்டு வரும்படி வலியுறுத்தி வந்தது. எல்லா விடயங்களிலும் பௌத்த பிக்குகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற இவ்வமைப்பின் கோரிக்கைகளுக்கு இசைந்தாற் போல் ஒரே நாளில் விசாரணை நடக்கும் விதத்தில் பௌத்த பிக்குகளுக்கு தனியானதொரு நீதிமன்றம் “சங்கா நீதிமன்றம்” என்ற பெயரில் அமைக்கப்பட உள்ளதாக பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அறிவித்துள்ளார் (colombopage.com, 2013).

இவை யாவற்றையும் விட பொது பல சேனாவின் சட்டத்தை மீறிய செயற்பாடுகள், தாக்குதல்களுக்கு எதிராக காவற்துறையினர் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும் குறிப்பிட வேண்டிய அம்சமாகும். பொது பல சேனா தொடர்பாக காவற்துறையினரிடம் தகுந்த ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் முறையான விசாரணைகள் இடம்பெறவில்லை என முஸ்லிம் பிரதிநிதிகள் குற்றம் சாட்டியுள்ளனர். அலுத்கம பிரச்சினையில் பாரிய இழப்புக்களை இவர்கள் ஏற்படுத்திய போதும் அது தொடர்பான போதியளவான விசாரணைகளைக் காண முடியவில்லை. மேலும் தாக்குதல் நடந்து கொண்டிருக்கும் போது அதனைத் தடுத்து நிறுத்த காவற் துறையினர் போதியளவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அதேபோல பொது பல சேனா தமது செயற்பாடுகளை பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பான ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பங்களிலே நிறைவேற்றுகின்றது.

இலங்கையின் இனமுரண்பாட்டுக்கான அடிப்படையை தோற்றுவித்த காரணிகளுள் இலங்கையின் தனிச்சிங்களச் சட்டம் முதன்மையானது. இத்தவறைத் திருத்திக் கொள்ளுமுகமாக தற்போது அரசாங்கத்தால் அமுல்படுத்தப் பட்டிருக்கும் மும்மொழி எண்ணக்கருவானது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அறிகுறியாக விளங்குகின்றது. இதன்படி அரச ஊழியர்களுக்கு இரண்டாம் மொழித் தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் பொது பல சேனா இதனைத் தாம் ஏற்க முடியாது என்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது இது சிங்கள பௌத்தர்களின் நாடு என்றும் ஆதலால் சிங்களவர்கள் தமிழைக் கட்டாயம் கற்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது என்றும் இப்படியே போனால் அரபையும் அரச கரும மொழியாக்கக் கோருவார்கள், எனவே தமிழர் மற்றும் முஸ்லிம்கள் தான் சிங்களம் கற்க வேண்டும் என்றும் சிங்களவர் தமிழைக் கற்க வேண்டும் என்ற நியதியை அரசாங்கம் வாபஸ் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தியது (வீரகேசரி,2013.12.7). இக்கருத்துக்கள் மீளவும் இனமுரண்பாட்டினை ஊக்குவிப்பதாகவே அமைகின்றன.

பொது பல சேனாவின் இச்செயற்பாடுகள் சட்ட ஒழுங்கை நிலை நாட்டுவதற்குப் பதிலாக அவற்றைக் குழப்புவனவாகவே உள்ளன. ஆனால் இவர்கள் எந்தவொரு கண்டிப்போ தண்டனையோ இன்றி சுதந்திரமாக நடமாடுகின்றனர். சட்டத்தைக் காக்க வேண்டிய பொலிஸ் நிர்வாகமும்

இவ்விடயத்தில் செயற்றிறன் அற்றுக் காணப்படுவது சந்தேகத்திற்குரியது. இவ்வாறு எந்த விதமான தடங்கலும் இன்றி சிறுபான்மையினரைத் தாக்குவதற்கான சூழலே தற்போது இலங்கையில் காணப்படுகின்றது. இவ்வாறு பொது பல சேனா அமைப்பு தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை வெளிக்காட்ட ஜனநாயக ரீதியான வழிமுறைகளை விடுத்து தீவிரப் போக்கினையே பின்பற்றியது. அமைதியான பேச்சுவார்த்தைகளை விட திடீர்ப் பிரவேசம் மூலம் கைகலப்பு, சச்சரவில் ஈடுபடுகின்றது. ஒரு மதவாத அமைப்பு இவ்வாறு அமைதியான வழிமுறைகளை விடுத்து அராஜக வழியில் செயற்படுவது வியப்புக்குரியதாகும். இவ்வமைப்பு தொடர்பாக இலங்கையின் அரசியல் பிரதிநிதிகளும் சர்வதேச அமைப்புக்களும் தமது விமர்சனங்களை முன்வைத்துள்ளன. இலங்கையின் அரசியல் பிரதிநிதிகள் சிலரால் பொது பல சேனா ஒரு மத தீவிரவாதக் குழு என்றும் முஸ்லிம்களுக்கு எதிராக கடும்போக்கு வாதத்தைப் பரவ விட்டுள்ளது என்றும் பாதுகாப்பு அமைச்சிலிருந்து அதற்கான நிதி வழங்கப் படுகின்றது என்றும் வெவ்வேறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

இலங்கையின் கூட்டணி ஆட்சிக்கு இடையே உள்ள தொடர்புகள் குறித்து உறுதியான ஆதாரங்கள் இல்லை. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சர்களினதும் சில அலுவலர்களினதும் ஆதரவை பொது பல சேனா அனுபவிக்கின்றது என்ற அறிக்கைகள் காணப்படுகின்றன(Aliff, 2015). அதேபோல சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு (International Crisis Group) பொது பல சேனாவின் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் நாட்டிற்குள் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை அதிகரிக்க வழிவகுக்கும் என்றும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கான குழு (Minority Rights Group) ஆனது நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலின் பின்னணியில் பொது பல சேனா காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் யுத்தம் முடிவுற்று அமைதி ஏற்பட வேண்டிய இக்காலப்பகுதியில் இவ்வாறான கடும்போக்குவாத அமைப்புக்களின் செயற்பாடுகள் நாட்டின் அமைதிக்கும் நல்லிணக்கத்துக்கும் அச்சுறுத்தலாகவே உள்ளன. இலங்கையில் இனப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு அரசியலை நடத்திய கலாசாரமானது தொடர்ந்தும் பின்பற்றப்படுவதற்கு ஏதுவாக தற்போது உருவாகியுள்ள பொது பல சேனாவின் இனவாத செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இலங்கையில் முப்பது வருட சிவில் யுத்தத்தின் முடிவினைத் தொடர்ந்து யுத்தத்திற்குப் பிந்திய காலப்பகுதியானது சமாதானத்தையும் அபிவிருத்தியையும் மீளிணக்கத்தையும் புதிதாகக் கொண்டுவரும் என்ற எதிர்பார்ப்புக்கள் இருந்தன. எனினும் யுத்தத்திற்குப் பிந்திய காலப்பகுதியில் ஒரு முக்கிய சவாலாக இருப்பது வழிபாட்டு இடங்கள் மற்றும் சமயம் சார் சமூக உறுப்பினர்களுக்கு எதிரான வன்முறைகளாகும். மத இடங்கள் மீதான கூட்டு தாக்குதல்கள், கொள்ளைகள், மத இடங்கள் மீதான நாசவேலை, மதகுருமாரைக் கொலை செய்தல், மதசமூகங்களிற்கு எதிரான போராட்டங்கள், இணையம் மற்றும் ஊடகங்களில் மதசமூகங்களிற்கு எதிரான விரோதமான பேச்சுக்கள் உட்பட்ட பல எண்ணிக்கையான சம்பவங்கள் உள்ளன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் இருக்கும் சேதமடைந்த மற்றும் அழிக்கப்பட்ட வழிபாட்டு இடங்களை மீளக்கட்டுவதற்கு சமயச் சனசமூகங்களுக்கு யுத்தத்திற்குப் பிந்திய காலப்பகுதி அனுமதித்திருக்கின்ற வேளையிலும், சமய இடங்களை சென்றடைவதற்கு பெருமளவில் நடமாட்டச் சுதந்திரம் கிடைத்திருக்கும் பொழுதும் இந்த வன்முறைச் செயற்பாடுகளாவன பாதுகாப்பின்மையையும் தாக்கப்படுதன்மையையும் உருவாக்கியுள்ளதுடன் அதனைத் தீவிரமாக்கியுள்ளது.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பௌத்த அடிப்படைவாதக் குழுக்களான பொது பல சேனா, சிஹல ராவய, ராவண பலய போன்றவற்றினால் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரச்சாரம், அச்சுறுத்தல், தாக்குதல்கள் என்பன ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்ற போதும் அரசாங்கத்தால் போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை (Colombo telegraph, 2014). மேலும் மியன்மாரில் இயங்குகின்ற 969 இன் செயற்பாடுகளை மியன்மாரிய அரசாங்கம் தடுத்து நிறுத்த எவ்வாறு வலுவற்றதாக உள்ளதோ அதேபோல பொது பல சேனாவின் செயற்பாடுகளிலும் இலங்கை அரசாங்கம் போதிய கவனம் கொண்டதாகத் தெரியவில்லை. அத்துடன் 2014 ஆம் ஆண்டு பொது பல சேனாவின் மாநாட்டுக்கான அஷின் விராதின் வரவைத் தடுக்குமுகமாக அவரின் பயண அனுமதியை இரத்து செய்யக் கோரி முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்தபோது அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை(foreignaffairsreview.co.uk, 2014). இது அரசியலிலான பொது பல சேனாவின் செல்வாக்கையே உணர்த்துகின்றது.

மேலும் பொது பல சேனா அண்மைக்காலமாக அரசாங்கத்தையும் அரசாங்கப் பிரதிநிதிகளையும் தாறுமாறாக விமர்சித்துக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருந்தாலும் அது தொடர்பாக அரசாங்கத்தின் பதிலீடுகள் நெகிழ்வுத் தன்மையுடையனவாகவே உள்ளன. மாறாக

இவ்வாறான விமர்சனங்கள் ஏனைய சிறுபான்மை மக்களிடமிருந்து வரும் போது மட்டும் அது தொடர்பான இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றமையும் பொது பல சேனாவுக்கும் அரசாங்கத்துக்குமான தொடர்புகள் குறித்த விமர்சனங்களை எழுப்புகின்றன.

இவை யாவற்றையும் விடுத்து பொது பல சேனாவின் மிக அண்மைக்கால வெளிப்படையான அரசியல் ஈடுபாடாக அமைந்தது 2015 பொதுத் தேர்தலில் தம்மை பொது ஜன பெரமுன (BJP) என்ற பெயரில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்ததுடன் நாகப் பாம்பு சின்னத்தில் போட்டியிட்டதுமாகும் (www.dailymirror.lk,2015). 2015 ஆகஸ்ட்டில் நடந்த இலங்கையின் 8ஆவது பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட செல்லுபடியான 11,167,185 வாக்குகளில் 20,377 வாக்குகளைப் பெற்று (0.18%) எந்த ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொள்ளாமல் தோல்வியடைந்தது (தேர்தல் திணைக்களம், 2015). இவ்வமைப்பானது 16 மாவட்டங்களில் தனது வேட்பாளர்களை நிறுத்தியும் அனைத்து இடங்களிலும் கட்டுப்பணம் கூட கிடைக்காத நிலையிலேயே தோல்வியைத் தழுவியது.

பொது பல சேனாவின் அரசியல் ஈடுபாட்டை பெரும்பான்மையினர் உட்பட அதிகமானவர்கள் விரும்பவில்லை என்பதன் வெளிப்பாட்டையே இத்தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன. ஒரு மத ரீதியான பின்புலத்தைக் கொண்ட இவ்வமைப்பானது சிறுபான்மையினருக்கு எதிராக பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளபோது கடந்த அரசாங்கத்தில் அவற்றின் செயற்பாடுகளில் அரசானது அலட்சியமாக இருந்ததையே அவதானிக்க முடிந்தது. எனினும் 2015 ஜனவரி ஆட்சி மாற்றமானது பொது பல சேனாவின் நடவடிக்கைகளில் சிறிது பின்வாங்கலை ஏற்படுத்தச் செய்ததனால் இவ்வமைப்பானது நேரடியாக அரசியலினுள் நுழைய தீர்மானித்தது. அதற்காக உருவாக்கப்பட்டதே பொது ஜன பெரமுன என்ற அரசியல் கட்சியாகும்.

5. முடிவுரை

எனவே மேற்கூறிய விளக்கங்களின் அடிப்படையில் நோக்கும்போது பொது பல சேனாவின் செயற்பாடுகளுக்கும் அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுவதை அவதானிக்கலாம். ஒரு மத அடிப்படையைக் கொண்ட அமைப்பின் கோரிக்கைகள் அண்மைக் காலமாக அரசாங்கத்தினால் செவிமடுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றமையே மேற்படி கூற்றுக்கான காரணமாகும். ஹலால் சான்றிதழ் நிறுத்தப்பட்டமை, மாடு அறுப்பதற்கான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை, பள்ளிவாசல்களை அண்டிய பகுதிகளை அகற்றல், பொது பல சேனாவின் வன்முறை செயற்பாடுகள் தொடர்பில் போதியளவு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை போன்றவை பொது பல சேனாவின் அழுத்தங்களால் ஏற்பட்டவையாகும். அதாவது மதவாத குழுவின் கருத்துக்கள் இலங்கையின் தற்போதய அரசியல் நடைமுறையில் பிரதிபலிக்கப்படுகின்றன. அதற்கு மேலாக பொது பல சேனாவின் அரசியல் பிரவேசமானது யுத்தத்திற்குப் பின்னரான இலங்கை அரசியலில் மதத்தின் ஈடுபாட்டை தெளிவுபடுத்துவதாக அமைகின்றது.

எவ்வாறாயினும் பொது பல சேனாவின் அரசியல் ஈடுபாட்டை குறைத்து மதிப்பிட முடியாது. மத, கலாசாரப் பாரம்பரியத்தைப் பின்பற்றுகின்ற மக்களைக் கொண்ட இலங்கையில் பெரும்பான்மையினராக பௌத்தர்கள் காணப்படுவதனால் அவர்களின் பொது பல சேனா அமைப்பின் மீதான நாட்டம் ஏற்படுவதற்கு சாத்தியங்கள் காணப்படுகின்றன. அதேபோல யுத்தத்திற்குப் பின்னரான மத சமூகங்களுக்கு இடையிலான முரண் உறவு மற்றும் பதட்டம் என்பன ஜனநாயகம், மீள் ஒருங்கிணைவு என்பவற்றுக்கு சவாலாகவே உள்ளன. எனவே தற்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றமானது நல்லாட்சியை உறுதியளித்துள்ள போதும் இவ்வாறான மத அடிப்படைவாதக் குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் அதிக கவனம் எடுத்து சிறுபான்மையினரைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது எனலாம்.

## REFERENCE

1. Aliff, S.M. (2015). Post-war conflict in Sri Lanka: violence against Sri Lankan Muslims and Buddhist hegemony. *International Letters of Social and Humanities vol. 59 (20150 pp 109-125.* Switzerland: SciPress Ltd.

2. Lazzarin, A. (2014). *The Rise of Buddhist Radicalism in Myanmar.*Retrieved from http://foreignaffairsreview.co.uk/2014/12/radical-buddhism-myanmar/

3. *Attacks on Places of Religious Worship in Post-War Sri Lanka*. (2013). Centre For Policy Alternatives.

4. *BBS to contest election as BJP under Cobra symbol?*. (2015). Retrieved from http://dailymirror.lk/77903/er-cobra-sym

5. Colombotelegraph. (2014). *Muslim ministers and mps write to president on Buddhist extremist threats to*

*Muslims.*Retrieved from http://www.colombotelegraph.com/index.php/Muslim-ministers-andmps-write-to-president-on-buddhist-extremist-threats-to-Muslims

6. Department of census and statistics- population by religion according to districts. (2012). Retrieved from http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/index.php?fileName=pop43&gp=Activities&tpl=3

7. Bastians, D. (2013). *"This is a Sinhala country, Sinhala Government": Bodu Bala Sena*. Retrieved from http://www.ft.lk/2013/02/18/this-is-a-sinhala-counry-sinhala-government-bodu-bala-sena/#sthash.ayw6Ris6.dpuf.

8. Dinouk Colombage.(2013). *Bodu Bala Sena: A Threat To Sri Lanka's Future.*Retrieved from http://groundviews.org/2013/03/19/bpdu-bala-sena-a-threat-to -sri-lanka-future/

9. Farzana, et al., (2014). *Where have all the neighbors gone? Aluthgama riots and its aftermath fact finding mission to Aluthgama, Dharga town, Valipanna and Beruwela*. Colombo: Law & Society Trust (LST).

10. Farzana, H. (2013). *Fecund Mullahs and Gonibillas: The gendered discourse of Muslim hate in post-war Sri Lanka.* Retrieved from http://www.ices.lk/wp-content/uploads/2014/02/Abstracts.pdf

11. Fowsar, M.A.M. (2009). *Religious symbolism and politics in Sri Lanka: Muslim's Grievances.* Department of Social Sciences, South Eastern University of Sri Lanka.

12. *Hardline monks rally Sri Lanka as Buddhist front.* (2014). Retrieved from http://www.eyesrilanka.com/2014/01/12/hardline-monks-rally-sri-lanka-as-buddhist-front/

13. Imtiyaz, A.R.M., (2010). *Politicization of Buddhism and Electoral Politics in Sri Lanka.*Retrieved from http://www.sangam.org/2010/03/Politicization_Buddhism.pdf

14. *International Religious Freedom Report for 2013, Executive summary.* United States Department of State • Bureau of Democracy, Human Rights and Labor. Retrieved From http://www.state.gov/documents/organization/222225.pdf

15. Izeth, H. (2014).*Making Sense of The Bodu Bala Sena.*Retrieved from https://www.colombotelegraph.com/index.php/making-sense-of-the-bodu-bala-sena/

16. Senaratne, K. (2014).*"Aluthgama" Shows that the Bodu Bala Sena Project is Approved by the State, Endorsed by the Govt and Largely Supported by Many Sinhala Buddhists.* Retrieved from http://dbsjeyaraj.com/dbsj/archives/30944

17. Farook, L. (2014).*Muslims of Sri Lanka under siege.*

18. Musa, M.A. (2015). *Islam and Buddhism: Preserving Harmonious Relations.* S. Rajaratnam School of International Studies, NTU. Retrieved from http://www.rsis.edu.sg/wp-content/uploads/2015/01/CO15007.pdf

19. *Votta, N.D. (2007). Sinhalese Buddhist Nationalist Ideology: Implication for Politics and Conflict resolution in Sri Lanka. Washington:* East-West Centre, Policy Studies No 40.

20. Parlimentary Election 17.08.2015. *All island Results*. (2015). Department of Election. Retrieved from http://www.selections.gov.lk/2015GE/AIVOT.html

21. Rameez, A. (2014). The Wave of Sinhala Buddhist Supremacism and Muslims of Sri Lanka. *In 4th International Symposium:*

*Emerging Trends and Challenges on Sustainable Development (2014): 35-38.* South Eastern University of Sri Lanka.

22. Siriwardane, R. (2014). *War, Migration and Modernity: The Micro-politics of the Hijab in Northeastern Sri Lanka.* Center for Development Research (ZEF), Germany: University of Bonn. Retrieved from http://www.zef.de/uploads/tx_zefnews/wp127.pdf

23. *Recent activities of Bodu Bala Sena are rehearsals for Regime Change?*. (2014). Retrieved from http://www.lankaweb.com/news/items/2014/06/19/recent-activities-of-bodu-bala-sena-are-rehearsals-for-Regime-change/

24. *Sri Lanka to set up a special Court for Buddhist monks*. (2013). Retrieved from http://www.colombopage.com.archive 13B/July28 1375018339JR.php

28. அபூபக்கர், எஸ்.எம்.எம். (2015 மார்ச் 29). இலங்கை அரசியலும் மதமும். *வீரகேசரி.* (ப-5).

29. *இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்புக்கான விளக்க உரை.* (2009). சர்வதேச விவகாரங்களுக்கான தேசிய ஜனநாயக நிறுவனம்

30. சத்தியசீலன், ச. (1994). *இலங்கை அரசியலில் மொழியும் மதமும்.* யாழ்ப்பாணம்: அருண் வெளியீட்டகம்.

31. சஹ்ராப்தீன், (2014 ஜனவரி 12). முஸ்லிம் விரோத செயல்களை அரசாங்கம் கண்டு கொள்ளாதிருப்பது வருந்தத்தக்கது. *வீரகேசரி.* (ப-2).

32. காரியப்பர், ஏ.எச்.எஸ் (2013 செப்டம்பர் 23). மீண்டும் பொங்கி எழுந்து விட்ட பொதுபல சேனா. *வீரகேசரி.* (ப-7).

33. பிலிப்ஸ், ரா, (2012 ஜூலை 20 - ஆகஸ்ட் 02). முஸ்லிம் விரோதத்தின் அரசியற் பின்னணி. *சமகாலம்.* (ப 28-31).

34. ஹலால் சான்றிதழ் வழங்குவதை நிறுத்த உலமா சபை வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவில்லை, ஷரியா சட்டத்தை இலங்கையில் அமுல்படுத்த இடமளியோம்- பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்த ஞானசார தேரர். (2013 ஒக்டோபர் 20). *வீரகேசரி.*

25. Gugler, T.K. (2013). *Buddhist Zion: Sri Lanka's Sinhalisation Politics toward its Muslim Minority.* Südasien-Chronik - South Asia Chronicle 3/2013, S. 161-182© Südasien-Seminar der Humboldt-Universität zu Berlin. Retrieved from http://edoc.hu-berlin.de/suedasien/band-3/161/PDF/161.pdf

26. Uyangoda, J. (1996). Militarization, Violent state, Violent society: In Kumar Rupashinge and khawar Mumtaz. (eds.). *Internal conflict in Sri Lanka.* London: Sage Publication.

27. பொ□ பலசேனா*(TIMELINE)*. Retrieved from http://www.satyamargam.com/islam/analysis/151-information/2192-bodhu-bala-sena-timeline.html

35. தலிபான், அல்-குவைதா கொள்கை பரப்பும் அரபு மத்ரசாக்களை மூட உடன் நடவடிக்கை தேவை, அரசிடம் ஞானசார தேரர் கோரிக்கை. (2013 ஜூன் 11). *சுடர் ஒளி.* (ப-1).

36. நஸ்மீன். (2013 ஜூன் 2). பசுக் கொலையும் தேரரின் தற்கொலையும். *நவமணி.* (ப-6).

37. முறாசில். (2013 பெப்ரவரி 26). "எந்தவொரு பள்ளிவாயலும் தாக்கப்படவில்லை!" எனும் பொய்யொன்று மெய்யான கதை!. *கிழக்கு.* (ப-10,11)

38. அன்சிர், ஏ.ஏ.எம் (2013 ஜனவரி 1). முஸ்லிம்களுக்கு எதிராகத் திரும்பியுள்ள இனவாதிகளின் செயற்பாடுகள். *தினக்குரல்.* (ப-14பு).

39. ஷேக்ராஜா, (2013 டிசம்பர் 7). மும்மொழிக் கொள்கைக்கு ஆப்பு. *வீரகேசரி.* (ப-9).

40. ஸ்டீபன், ஜே.ஜி., பன்னீர்செல்வம், ப. (2013 பெப்ரவரி 07). முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டது, சபையில் ரணில் குற்றச்சாட்டு ஜிகாத்துக்கு தவறான அர்த்தம் கற்பிக்கப்படுவதாகவும் விசனம். *வீரகேசரி.* (ப-1).